மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் அரசாங்கத்திலே உள்ள வேளாண்மைத் துறை அதிகாரிகளால் ஒடுக்கப்படுவதாக ஒரு எண்ணம் பரவலாக இருக்கின்றது. அதை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இந்த அலுவலர்களையும் அரசாங்க அலுவலர்களாக எடுத்துக் கொள்கின்ற திட்டம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவர்களையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்குகின்ற எண்ணம் இருக்கின்றது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதிகாரிகள் ஒடுக்குவதாகச் சொன்னார்கள். மக்களாட்சி நடக்கின்ற நாட்டிலே யாரும் யாரையும் ஒடுக்க முடியாது.

திரு. ஏ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் பணியாற்றுகின்ற கண்காணிப்பாளர் போன்ற பணிகளை எல்லாம் வேளாண்மைப் பட்டம் படித்த அதாவது பி.எஸ்.ஸி. அக்ரி. படித்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பது பற்றி பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது உண்மையா? தற்போது பணியாற்றுகின்ற அனுபவம் மிக்க கண்காணிப்பாளர்களே தொடர்ந்து கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றுவதற்கு அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள முறையினை இப்போது மாற்றும் உத்தேசம் இல்லை.

குடிய-த்தம் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை

*வினா எண் 147—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையை நவீன முறையில் விஸ்தரிக்க அரசு ஆலோசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, குடியாத்தத்திலே உள்ள கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை நிறுவப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப் பிறகு அந்த இடத்திலே மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே கரும்பு விஸ்தரிப்பு அதிகமாக ஆகி இருப்பதால் அந்த ஆராய்ச்சிப் பண்ணையையும் விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சிப் பண்ணை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தாலே நடத்தப்படுவதாகும். அங்கே ஆராய்ச்சிக்குத் தேவையான அத்தனை வசதிகளும் இப்போது இருக்கின்றன. எனவே அதை விரிவு படுத்த வேண்டிய தேவையில்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ள பதிலில் அதனை விரிவுபடுத்தவேண்டிய தேவையில்லை என்று சொன்னார்கள். அங்கே என்னென்ன ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அந்த ஆராய்ச்சிகளின் பயனாக இதுவரையில் அடைந்த நன்மைகள் என்னென்ன? புதிய கரும்புகள் எத்தனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதிக மகசூல் தரக்கூடிய ரகங்கள், மாவட்டங்களுக்கேற்ற சாகுபடி முறைகள் இவைகளுக்காகத்தான் ஆராய்ச்சி கூடங்கள் நிறுவப்பட்டு அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடியாத்தம் ஆராய்ச்சிப் பண்ணையில் நோய் வராத கரும்புவிதைக் கருணைகளை அதிக அளவில் உற்பத்தி செய்து வடாற்காடு மாவட்டத்தில் விநியோகிக்கின்ற முழுத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்படி விதைக் கருணைகளை நீராவியால் பக்குவப்படுத்த போதுமான வசதிகள் அங்கே இருக்கின்றன. ஆகவேதான் அதை விரிவு படுத்தத் தேவையில்லை.

ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 148—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல் ஆராய்ச்சிப்பண்ணை, வாழை ஆராய்ச்சிப் பண்ணையுள்ள ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.